# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி
## பொதுத்தேர்வு
## 2022
## வளர்தமிழ் 4

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 120 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 05 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. மெய் எழுத்துகள் ________________ .

   ( 30, 12, 18 )

2. அரசன் படைநடத்திச் செல்லும் போது முழங்கிய முழவு ________________ .

   ( கொடைமுரசு, போர்முரசு, மணமுரசு )

3. கிருமிகளை அழிக்கப் பயன்படும் இலை ________________.

   ( மாவிலை, பலாவிலை, வேப்பிலை )

4. வெடியோசை கேட்ட புறாக்கள் ________________ எனச் சிறகடித்துப் பறந்தன.

   ( கிடுகிடு, படபட, சலசல )

5. 60 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________ .

   ( அறுபது, அருவது, அறுவது )

6. நீ கொடுத்தாய். நீங்கள் ________________ .

   ( கொடுத்தீர், கொடுத்தீர்கள், கொடுத்தோம் )

7. எமது மரபுவழி விளையாட்டு ________________ .

   ( கிளித்தட்டு, வலைப்பந்து, உதைபந்து )

8. தொடர்ந்து ________________ மழையால் ஊர் அழிந்தது.

   ( வீசிய, மின்னிய , பெய்த )

9. நீரில் நீண்ட நேரம் தங்கியிருக்கும் பறவை ________________ .

( கிளி, குயில், கொக்கு )

10. ஒற்றுமை என்பதன் எதிர்ச்சொல் ________________ .

( நன்மை, வேற்றுமை, இகழ் )

11. **நொடி:**
நான்கு கால் உண்டு நாற்காலி அல்ல.
மேலே விரிப்புண்டு பல்லக்கும் அல்ல. அது என்ன? ________________

( கட்டில், இருக்கை, வண்டில் )

12. இங்குள்ள ஓவியங்கள் ________________ அழகானவை.

( அவற்றுள், ஒவ்வொன்றும், இவற்றுள் )

13. ஆலமரம் கோடைநாளில் குடையைப்போல ________________ த் தரும்.

( மழையை, காற்றை, நிழலை )

14. இராவணனின் கொடி ________________ க் கொடி ஆகும்.

( வாள், மீன், வீணை )

15. முன்னாளில் பலசரக்குகளை வாங்குவதற்காக ________________ ஆசிய நாடுகளுக்கு வந்தனர்.

( ஐரோப்பியர், சீனர், இந்தியர் )

16. கடிகாரம் அலறியது. ________________ நான் படுக்கையிலிருந்து எழுந்தேன்.

( எப்போது, அப்போது, இப்போது )

17. திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற கோவில் ________________ .

( கோணேச்சுரம், நல்லூர், நகுலேச்சுரம் )

18. கோழி கொக்கரிக்கும். அது போல சேவல் ________________ .

( கூவும், பேசும், அகவும் )

19. **பழமொழி:**

எலி வளையானாலும் தனி ________________ வேண்டும்.

( வலை, வளை, வழை )

20. ஏழாலையில் ________________ சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார்.

( தாமோதரம்பிள்ளை, பாரதியார், பாவேந்தர் )

21. ஆதி + குடியினர் ________________

(ஆதிக்குடியினர், ஆதிகுடியினர், ஆதிற்குடியினர் )

22. தாளுண்ட நீரைத் தலையாலே தருவது ________________ .

( மா, பலா, தென்னை )

23. வேப்பம் பட்டையிலிருந்து காய்ச்சப்படுவது ______________ .

( கசாயம், பதநீர், பழச்சாறு )

24. அணில்கள் மரத்திலிருந்து பழங்களைக் ______________ .

( கொறிக்கின்றது, கொறிக்கின்றார், கொறிக்கின்றன )

25. திருகோணமலை நெல்விளையும் பழனங்களைக் கொண்டுள்ளது.
இங்கு பழனங்கள் என்பது ______________ .

( வயல்கள், காடுகள், குளங்கள் )

26. **ஒலிவட்டு:**
வியர்வையைப் போக்க உதவுவது ______________ .

( குடை, காற்றாடி, ஓலை )

27. நூலகத்தில் பல நூல்கள் காணப்படுகின்றன. ______________
மாணவரின் கல்விக்கு உதவுகின்றன.

( அது, அவை, அவர்கள் )

28. ______________ வாழும் உயிரினங்களுள் ஒன்று சுறா.

( கடலில், வீட்டில், காட்டில் )

29. நீ உன் கடமையைச் செய்யத் ______________ .

( தவறு, செய்யாதே, தவறாதே )

30. பெரிய இதழை உடைய பூ ______________ .

( தாழம்பூ , மகிழம்பூ, மல்லிகைப்பூ )

புள்ளிகள் 30

## 2) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| கண்ணுங்கருத்துமாக | கல்விகேள்விகளில் | வண்ணவண்ண |
| அக்கம்பக்கம் | ஓட்டமும்நடையுமாக | |

1. இராவணன் ஆட்சிக்காலத்தில் மக்கள் ____________________ சிறந்து விளங்கினர்.

2. மக்கள் ____________________ ஆடைகளை அணிந்து விழாவுக்குச் சென்றனர்.

3. தாய் தனது மகனின் கல்வியில் ____________________ இருந்தார்.

4. நேரம் ஆகிவிட்டதால் எழிலி ____________________ த் தேர்வுக்குச் சென்றாள்.

5. நிலவன் ____________________ பார்த்து வீதியைக் கடந்தான்.

புள்ளிகள் 05

**3) பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. ஒருவரை ஒருவர் காணும்போது வணக்கம் கூறுவது தமிழர்

   ____________________ .

2. சிலப்பதிகாரத்தை முத்தமிழ்க் காப்பியம் என்றும்

   ____________________ .

3. விபுலாநந்தர் யாழ்நூலை ____________________ .

4. சென்ற ஆண்டு அறிவன் தாயகம் ____________________ .

5. தாமோதரம்பிள்ளை சிறுப்பிட்டியில் ____________________ .

புள்ளிகள் 10

## 4) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. ________________ பெரிய யானையையும் எதிர்த்துத் தாக்கும்.

( புளி, புலி )

2. எல்லாளனது ஆட்சிக்காலம் ________________ காலம் எனப் போற்றப்படுகிறது.

( செழிப்பான, செளிப்பான )

3. பால், தயிர், மோர், ________________, நெய் என்பன ஆனைந்து எனப்படும்.

( வென்னெய், வெண்ணெய் )

4. ________________ நாட்டார் கலை ஆகும்.

( கோலாட்டம், கோளாட்டம் )

5. அறிஞர்கள் திருக்குறளைப் ________________ போற்றினர்.

( புகள்ந்து, புகழ்ந்து )

புள்ளிகள் 05

## 5) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழருடைய பண்பாடுகளில் ஒன்று விருந்தோம்பல். வீட்டுக்கு வருபவரை வரவேற்று உணவளிப்பது விருந்தோம்பல் எனப்பட்டது. நாம் வீட்டுக்கு வருபவரை அன்பாக வரவேற்க வேண்டும். வீட்டில் இருப்பவர்கள் செய்ய வேண்டிய கடமைகளுள் ஒன்று விருந்தோம்பல். திருக்குறளில் விருந்தோம்பல் பற்றிச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, நாம் விருந்தோம்பல் பண்பைப் பேணுவோம்.

1. விருந்தோம்பல் யாருடைய பண்பாடுகளில் ஒன்று?

______________________________________________

2. யாரை வரவேற்று உணவளிப்பது விருந்தோம்பல் எனப்பட்டது?

______________________________________________

3. நாம் வீட்டுக்கு வருபவரை எவ்வாறு வரவேற்க வேண்டும்?

______________________________________________

4. விருந்தோம்பல் பற்றி எந்த நூலில் கூறப்பட்டுள்ளது?

______________________________________________

5. நாம் எப்பண்பைப் பேணுவோம்?

______________________________________________

புள்ளிகள் 10

**6) மிகப் பொருத்தமான சொற்களைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| பால் | உண்ண | வண்ணம் |
| மாட்டு | கட்டுவர் | |

தமிழர் தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப்பொங்கலைக் கொண்டாடுவர். மாடுகள் வயலை உழுவதற்குப் பயன்படுகின்றன. ஆவில் இருந்து ________________ பெறப்படுகிறது. மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் நாளே ________________ ப் பொங்கல் ஆகும். மாட்டுப் பொங்கல் அன்று மாடுகளைக் குளிப்பாட்டுவர். மாடுகளின் கொம்புகளுக்கு ________________ பூசுவர். அவற்றின் கழுத்தில் மணிகளைக் ________________ . அன்று தொழுவத்தில் பொங்கலிடுவர். பொங்கலை மாடுகளுக்கு ________________ க் கொடுத்து, தங்கள் நன்றியைத் தெரிவிப்பர்.

புள்ளிகள் 10

## 7) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. உடல்நலத்துக்காக உணவில் சேர்க்கப்படுபவை எவை?

______________________________

______________________________

2. மன்னனாய் இருந்தும் ஈசன் எனப் போற்றப்பட்டவன் யார்?

______________________________

______________________________

3. ‘புல்மோட்டை’ என்னும் ஊர் எங்கே உள்ளது?

______________________________

______________________________

4. கிளித்தட்டு விளையாடுவோர் எத்தனை கன்னையாகப் பிரிந்து நிற்பர்?

______________________________

______________________________

5. கப்பல்கள் தரித்து நிற்கும் இடம் எது?

______________________________

______________________________

புள்ளிகள் 10

**8) தரப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளைக் கட்டங்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| நா | ட் | டி | தொ |
| ளி | த | பே | க் |
| ல | யா | சி | ஒ |
| ம் | லை | கா | நி |
| லா | ர் | ட | க |

1. வானத்தில் தெரிவது ______________ .

2. காய்கறிகளில் ஒன்று ______________ .

3. நான்கு அடிகளைக் கொண்டது ______________ .

4. நீரின்றி நீண்ட நாட்கள் வாழும் விலங்கு ______________ .

5. நாம் பிறருடன் உரையாடுவதற்கு உதவுவது ______________ .

புள்ளிகள் 05

9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதையைத் தொடர்ந்து எழுதுக.



புள்ளிகள் 15

கரிகாலன் நான்காம் வகுப்பு மாணவன். அவன் ஒரு நாள் ..........

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை